

முதலமைச்சர் அவர்கள் நெல்லையில் பிப்ரவரி 7 அன்று முடிவுற்ற திட்டப்பணிகள் திறந்து வைத்தல், புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்,அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிக்க உள்ள நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் பணிகள் குறித்து நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப்,மாநகர செயலாளர் சுப்பிரமணியன் முன்னாள் எம்.பி. ஞானதிரவியம் உட்பட பலர் உள்ளனர்.



சேலம் மாவட்டம், இராமநாயக்கன்பாளையத்தில் (4.2.2025) நேற்று முன்தினம் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" மூன்றாம் கட்ட முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நலத்திட்ட உதவிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், ஆத்தூர் வருவாய் கோட்டாட்சியர் தா.பிரியதர்ஷினி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் உறுதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி!

நடத்திக்கொண்டு வருகிறோம். இன்று உலக நாடுகள் பல்வேறு இயற்கைப் பேரிடர்களை சந்தித்து வருகிறது.

குறிப்பாக சொல்லவேண்டும் என்றால், கடந்தாண்டு

• துபாயில் ஏற்பட்ட வெள்ளம்

• சீனா, பிரேசில், ஜெர்மனி, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் ஏற்பட்ட வெள்ளம்

• அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சல்ஸ்இல் ஏற்பட்ட காட்டுத் தீ

• வெப்ப மண்டல நாடுகளில் ஏற்பட்ட வெப்ப அலை பாதிப்புகள் ஆகியவற்றை நாம் நினைவு படுத்திக் கொள்ள வேண்டும்.

• அதேபோல், நம்முடைய சகோதர மாநிலமான கேரளத்தில் ஏற்பட்ட வயநாடு நிலச்சரிவை யாரும் மறந்திருக்க முடியாது.

• நம்முடைய மாநிலத்திலும், திருவண்ணாமலையில் சிறிய அளவில் நிலச்சரிவு ஏற்பட்டது.

இதையெல்லாம், வேறு வேறு நாடுகளில் வேறு வேறு மாநிலங்களில் நடந்த சம்பவங்களாக இருந்தாலும், இது எல்லாவற்றிற்கும் ஒரே காரணமாக காலநிலை மாற்றத்தைத் தான் சொல்ல முடியும். இதை நாம் எதிர்கொண்டுதான் ஆகவேண்டும். அதற்கு முதல் தேவை, பிரச்சினையின் தீவிரத்தை உணர்வது! காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய விளைவுகளையும், பேரிடர்களையும் எதிர்கொள்ளவேண்டும் என்றால், அனைத்துத் தரப்பு மக்களுக்கும் காலநிலை மாற்றம் என்றால் என்ன? அதன் விளைவுகள் என்ன? அதை எப்படி எதிர்கொள்வது? அதற்கேற்றபடி, நம்மை எப்படி தகவமைத்துக்கொள்வது என்று விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இது மட்டும் நடந்தால், நம்முடைய சமூகம் காலநிலைக் கல்வியறிவை பெற்ற சமூகமாக இருக்கும். பேரிடர்களிலிருந்து மீண்டு வருவதற்கான 'Resilience' இருக்கும்.

**காலநிலை கல்வி அறிவை இயக்கமாக முன்னெடுப்போம்!**

காலநிலை மாற்றத்தை கல்வித் துறை மூலமாகவே புகட்ட நம்முடைய அரசு திட்டமிட்டிருக்கிறது. தமிழ்நாட்டின் எதிர்காலத்திற்கான கனவுகள் எல்லாவற்றிற்கும் கல்விதான் அடித்தளமாக இருக்கிறது! அதனால்தான், நம்முடைய அரசு, காலநிலைக் கல்வியறிவை ஒரு இயக்கமாகவே முன்னெடுக்க முடிவு செய்திருக்கிறது.

இதுதொடர்பாக, ஒரு முக்கிய அறிவிப்பை இப்போது வெளியிடுகிறேன்.

**தமிழ்நாட்டின் எல்லா பள்ளிகளிலும் 'சூழல் மன்றங்கள்' ஏற்படுத்தப்படும்!**

காலநிலைக் கல்வியறிவுக்கு என்று ஒரு கொள்கையை தமிழ்நாடு அரசு விரைவில் வகுத்து அறிவிக்க இருக்கிறோம். எல்லோருக்கும் அவசியமான காலநிலை விழிப்புணர்வை மாணவர்கள் மூலமே அனைத்துத் தரப்பு மக்களிடமும் கொண்டு சேர்க்க இருக்கிறோம். பல்வேறு துறை அரசு அலுவலர்களுக்கும் காலநிலை மாற்றத் தடுப்பு மற்றும் தழுவல்களுக்கான திறன் வளர் பயிற்சிகள் வழங்கப்படும். காலநிலை மாற்றத்தால், பாதிப்படையக் கூடிய வேளாண்மை, நீர்வளம் ஆகிய துறைகளுக்கு சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்படும். பசுமைக் குடில் வாயுக்களின் உமிழ்வை குறைப்பதற்கான வழிமுறைகள் காணப்படும். வெப்ப அலையை மாநிலப் பேரிடராக தமிழ்நாடு அரசு அறிவித்து, அரசிதழில் வெளியிடப்பட்டிருக்கிறது. வெப்ப அலையால் உயிரிழக்க நேரிட்டால்,

4 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறோம். வெப்ப அலையை எதிர்கொள்வதற்கான மருத்துவ வசதிகள் மற்றும் ஓ.ஆர்.எஸ். கரைசல் வழங்க மாநில பேரிடர் மேலாண்மை நிதியை பயன்படுத்திக் கொள்ளலாம். வெப்ப அலை தாக்கத்தின்போது, தண்ணீர் பந்தல்கள் அமைத்து குடிநீர் வழங்கவும், மாநில பேரிடர் மேலாண்மை நிதியை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அறிவித்திருக்கிறோம்.

**காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் உறுதி!**

• இயற்கை வளங்களைப் பாதுகாக்க அக்கறை கொண்ட சமூகமாக நாம் மாறவேண்டும்.

• இயற்கைப் பேரிடர்களிலிருந்து தற்காத்துக் கொண்டு, மீண்டெழக்கூடிய சமூகமாக வளரவேண்டும்.

• பசுமைத் தொழில்நுட்பங்கள் மூலமாக பொருளாதார வளர்ச்சியை முன்னிறுத்தக் கூடிய சமூகமாகவும்,

• உலகளாவிய காலநிலைக் குறிக்கோள்களை அடைய உறுதுணையாக இருக்கும் சமூகமாகவும் எதிர்காலத்தில் நாம் திகழ வேண்டும்.

தமிழ்நாடு அரசு பொருளாதார மேம்பாட்டையும், சுற்றுச்சூழல் பொறுப்புணர்வையும் இரு கண்களாக கருதி, தொடர்ந்து செயலாற்றி வருகிறது. ஒவ்வொரு முன்னெடுப்பும் இதை மனதில் வைத்துதான் செய்யப்படுகிறது. அது, நீர்நிலைகள் மறுசீரமைப்பு, காலநிலை மீள்திறன் கொண்ட நகரங்களை கட்டமைத்தல் BioDiversityயை பாதுகாத்தல் என்று காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் நம்முடைய உறுதியை வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

எதிர்க்காலத்தில் வரக்கூடிய சூழலியல் பிரச்சினைகளையும் கருத்தில் கொண்டு இப்போதே Advanceஆக திட்டமிட்டு அதற்கான நடவடிக்கைகளையும் நம்முடைய அரசு மேற்கொண்டு வருகிறது. அதை உலகத்திற்கு எடுத்துரைக்கும் உரைகல்லாக இந்த மாநாடு விளங்குகிறது.

மக்களுக்குத் தொடர்ந்து காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்படும் என்பதை மீண்டும் ஒரு முறை உறுதி செய்து உங்களிடமிருந்து விடை பெறுவதற்கு முன்பு இந்த மாநாடு வெற்றி அடைய வாழ்த்தி, இதனை சிறப்பாக ஒருங்கிணைத்த அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களுக்கும், செயலாளர் செந்தில்குமார், அவர்களுக்கும் மற்றும் அவரோடு துணைபுரிந்த அனைத்து உறுப்பினர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்து என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கால நிலை மாற்றம் குறித்த உச்சி மாநாட்டில் உரையாற்றினார்.

வில்லிவாக்கம் அகத்தீஸ்வர சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான

# ரூ.10 கோடி மதிப்பிலான சொத்துகள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்பு!

சென்னை, பிப். 6–

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின் படியும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் ஆக்கிர மிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் 04.02.2025 அன்று சென்னை, வில்லிவாக்கம், அகத்தீஸ்வர சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான ரூ.10 கோடி மதிப்பிலான சொத்துகள் மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

சென்னை, வில்லிவாக்கம், அகத்தீஸ்வர சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமாக M.T.H. சாலை, சிவசக்தி காலனியில் உள்ள 17,625 சதுரடி பரப்பளவு கொண்ட வணிக மனையானது சக்தி எலக்ட்ரோ பிளேட்டிங் என்று நிறுவனத்திற்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. இந்நிறுவனம் நீண்ட நாட்களாக வாடகைத் தொகை நிலுவையில் வைத்திருந்ததால், சென்னை மண்டலம் 2 இணை ஆணையர் திருமதி கே.ரேணுகாதேவி அவர்களின் நீதிமன்ற உத்தரவின் படி, ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, சென்னை உதவி ஆணையர் கி.பாரதிராஜா முன்னிலை யில், காவல் துறை மற்றும் வருவாய் துறை அலுவலர்கள் ஆகியோரின் உதவியுடன் ஆக்கிரமிப்புகளை அகற்றி, திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.10 கோடியாகும்.

இந்நிகழ்வின்போது வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்) திருவேங்கடம், திருக்கோயில் அறங்காலர் குழுத் தலைவர் பாஸ்கர், அறங்காவலர்கள் நித்யானந்தம், வேலாயுதம், செயல் அலுவலர் அ.குமரேசன், மயிலாப்பூர் சரக ஆய்வாளர் திருமதி உஷா மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.

# செங்கல்பட்டு தடுப்பூசி மையத்தை தமிழ்நாடு அரசிடம் தாருங்கள்!

## நாடாளுமன்றத்தில் தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, பிப். 6–

தி.மு.க. எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் நேற்று முன்தினம், விதி எண் 377ன் கீழ் வலியுறுத்திய கோரிக்கை விவரம் வருமாறு:



தமிழ்நாட்டின் செங்கல்பட்டில் சுமார் ரூ. 800 கோடி முதலீட்டுடன் கூடிய ஒன்றிய அரசின் HLL பயோடெக் லிமிடெட் நிறுவனம் 12 ஆண்டுகளாக செயல்படாமல் உள்ளது.

இந்த திட்டத்திற்கான ஒப்புதல் வழங்கப்பட்டபோது அது தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்பட்டது. ஏனென்றால் பி.சி.ஜி., தட்டம்மை, ரேபிஸ், ஹெபாடைடிஸ் உள்ளிட்ட 75 சதவீத தடுப்பூசி தேவைகளை இது பூர்த்தி செய்யும் நோக்கத்தை கொண்டிருந்தது. இது இந்தியாவின் சுகாதார பாதுகாப்பிற்கு முக்கியமானது. ஆனால் அந்த நோக்கங்களை நிறைவேற்ற முடியவில்லை.

செயல்படாமல் இருக்கும் இந்த தடுப்பூசி மையத்தை தமிழ்நாடு அரசு பயன்படுத்த முடிவு எடுத்தது. எனவே, தடுப்பூசி மையத்தை குத்தகைக்கு தருமாறு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பலமுறை கேட்டுள்ளார்.

இந்த திட்டத்திற்கு நிலம் வழங்கியதே தமிழ்நாடு அரசுதான். அதனால், அதன் செயல்பாட்டுக்கு உரிமை கோருவது நியாயம் ஆனது.

எனவே, உள்நாட்டு தடுப்பூசி உற்பத்திக்கான அவசரத் தேவையையும், மகத்தான வளங்கள் வெறுமனே கிடப்பதையும் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசுக்கு தடுப்பூசி மையத்தை தருமாறு ஒன்றிய அரசாங்கத்தை வலியுறுத்துகிறேன். மேலும், தமிழ்நாட்டில் தடுப்பூசி உற்பத்தி திறன்களை மேம்படுத்த கூனூரில் உள்ள பாஸ்டர் நிறுவன செயல்பாடுகளை மீண்டும் முன்னெடுக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் வலியுறுத்தி உள்ளார்.

தமிழ்நாட்டின் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அதிகரித்துள்ள கோதுமைத் தேவையை உயர்த்தி வழங்க எழுப்பிய கேள்விக்கு

# ஒன்றிய அமைச்சர் பிரல்ஹாத்டு ஜோசி பொறுப்பான பதிலளிக்கவில்லை!

## மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் அதிருப்தி

புதுடெல்லி, பிப். 6–

தமிழ்நாட்டின் பொது விநியோக திட்டத்தின் கீழ் அதிகரித்துள்ள கோதுமை தேவையின் அளவை உயர்த்தி வழங்குவது குறித்து நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கேஆர்என்.இராஜேஸ்குமார் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கலந்து கொண்டு, தமிழ்நாட்டில் தற்போது கோதுமைக்கான தேவை அதிகரித்து வருகி



றது. தற்போதைய ஒதுக்கீடான மாதம் ஒன்றுக்கு 8500 டன் என்பதை 20000 டன் அளவில் உயர்த்தி வழங்க வேண்டும் என தமிழ்நாடு உணவு மற்றும் நுகர் பொருள் வாணிப கழகம், மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. தமிழ்நாடு அரசின் இந்த கோரிக்கையை நிறைவேற்ற ஒன்றிய அரசு பரிசீலித்து வருகிறதா ? என கேள்வி எழுப்பினார்

இதற்கு பதில் அளித்து பேசிய ஒன்றிய உணவு மற்றும் பொது விநியோக துறை அமைச்சர் பிரல்ஹார்டு ஜோசி, உணவுப்பொருள் வழங்குதலுக்கும், ஒதுக்கீடு செய்வதற்கும் உள்ள விகிதத்தின் படி தமிழ்நாட்டிற்கான கோதுமை வழங்கப்படும் என தெரிவித்தார்.

இதை அடுத்து கே.ஆர். என்.இராஜேஸ்குமார் எம்.பி தெரிவிக்கையில், மாநிலங்களவை கூட்டத்தில் நான் தமிழ்நாட்டின் அவசிய தேவையான கோதுமையை உயர்த்தி வழங்க கேட்டதற்கு, ஒன்றிய உணவு துறை அமைச்சர்

பொறுப்பான பதிலளிக்கவில்லை என அதிருப்தி தெரிவித்துள்ளார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம் வட்டம், ஆற்கவாடி ஊராட்சியில் அன்னம்மாள் க/பெ மாணிக்கம் என்பவரது கூரை வீடு மின்கசிவின் காரணமாக கடந்த பிப்ரவரி 3 அன்று தீப்பற்றி எரிந்து முழுவதும் சேதமடைந்து விட்டது, தகவல் அறிந்து கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் அறிவுறுத்தலின்படி, கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பாரதிதாசன் மாவட்ட, ஒன்றிய,கிளைக் கழக நிர்வாகிகளுடன் நேரடியாகச் சென்று பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் நிதியுதவி வழங்கி ஆறுதல் அளித்தார், இந்நிகழ்வில் குறுவட்ட ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர், ஊராட்சி செயலர் உள்ளிட்டோர் பலர் உடன் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

நாள் : 4.02.2025



## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

**1. நூறு நாள் வேலை ஊதியம் – தாமதம் ஏன்?**

**கலாநிதி வீராசாமி**



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் போதிய வேலைவாய்ப்புகள் ஏற்படுத்துவதில் ஒன்றிய அரசு தவறுகிறது என வட சென்னை மக்களவை திமுக உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி குற்றம்சாட்டியுள்ளார். அதேபோல் இத்திட்டத்தின்கீழ் மக்களுக்கு தாமதமாக ஊதியம் கிடைக்கப் பெறுவதையும் அவர் சுட்டியுள்ளார்.

மாநில மற்றும் உள்ளூர்மட்டங்களில் நிதிகளை நிர்வகிப்பதில் வெளிப்படைத்தன்மையும் பொறுப்புணர்வையும் அரசு உறுதி செய்ய வேண்டும், கிராமப்புற மக்களிடையே நூறு நாள் வேலை திட்டத்தின்கீழ் அவர்களின் உரிமைகள் குறித்து விழிப்புணர்வை அதிகரிக்க செய்ய வேண்டும் போன்ற கோரிக்கைகளையும் அவர் எழுப்பியுள்ளார்.

**2. நாய்க்கடியால் பாதிக்கப்பட்ட 22 லட்சம் பேர்! தீர்வு என்ன?**

**அருண் நேரு**



கிராமப்புறப் பகுதிகள் மற்றும் நகரங்களில் நாய்கள், குரங்குகள் உள்ளிட்ட தெருவிலங்குகளினால் மக்கள் மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாவதை குறிப்பிட்டும் உயிராபத்து ஏற்படுவதை தடுக்க வலியுறுத்தியும் பெரம்பலூர் மக்களவை உறுப்பினர் அருண் நேரு இன்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

அதில் அவர் தெருவில் நாய்களினால் ஏற்படும் ஆபத்தை தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்க உள்ளாட்சி அமைப்புகளிடம் போதுமான நிதி இல்லை என்பதை சுட்டிக் காட்டினார்.

இதுவரை நாடு முழுவதும் காயமடைந்த குழந்தைகள் பற்றிய விவரங்களை அரசு வெளியிட வேண்டுமென கேட்டுக் கொண்ட அருண் நேரு, குழந்தைகள் பாதிக்கப்படுவதை தடுக்க உடனடியாக ஒன்றிய அரசு வலிமையான திட்டங்கள் வகுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

**3. தமிழ்நாட்டு ஜவுளி ஏற்றுமதியை அதிகரிக்க கோரிக்கை**

**சி.என். அண்ணாதுரை**

**க.செல்வம்**






பருத்தி, செயற்கை இழைகள் மற்றும் ஆயத்த ஆடைகள் உள்ளிட்ட முக்கிய பிரிவுகளில் கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதி செயல்திறன் குறித்து திருவண்ணாமலை மக்களவை உறுப்பினர் சி. என். அண்ணாதுரை மற்றும் காஞ்சிபுரம் மக்களவை உறுப்பினர் செல்வம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அடுத்த மூன்று ஆண்டுகளில் இந்திய ஜவுளிப் பொருட்கள் ஏற்றுமதியை அதிகரிக்க அரசு வகுதுள்ள கொள்கைகள் மற்றும் உத்திகள், கடந்த மூன்று ஆண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டில் ஜவுளி ஏற்றுமதியில் தமிழ்நாடு அரசின் பங்களிப்பு, தமிழ்நாட்டில் மொத்தம் பதிவு செய்யப்பட்ட ஜவுளித்தொழில்கள் மற்றும் தொழிற்சாலைகள் எத்தனை, ஏற்றுமதியை அதிகரிக்க அரசிடம் உள்ள நிதி உதவித்திட்டங்கள் போன்றவற்றின் விவரங்களை வெளியிடுமாறு அவர் தனது கேள்வியில் குறிப்பிட்டு ள்ளார்கள்.

**4. மீனவர்களுக்கு அரசு வீடுகள்**

**கதிர் ஆனந்த் கோரிக்கை**



தமிழ்நாட்டில் உள்ள மீனவர் சமூகத்தினருக்கு சுனாமி மற்றும் வெள்ளத் தடுப்பு வீடுகள் வழங்க ஒன்றிய அரசிடம் உள்ள திட்டங்களின் விவரங்களை கேட்டு வேலூர் மக்களவை உறுப்பினர் கதிர் ஆனந்த் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாட்டில் இத்திட்டங்களின்கீழ் பயனடைந்தவர்களின் விவரங்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு ஆகியவற்றையும் அவர் கோரியுள்ளார்.

மேலும் மீனவர்களுக்கு போதுமான வீட்டுவசதி, கல்வி, விளையாட்டு மற்றும் மருத்துவ உள்கட்டமைப்பு வசதிகளை ஒன்றிய அரசு மேம்படுத்தவேண்டும் எனவும் அவர் கோரிக்கை வைத்துள்ளார்.